# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC–85/2023

Prosecution witness – PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.தேவகனி | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A1, A2 present.)

19.05.2026 – 12.30 PM

<u>முதல் விசாரணை</u>:–

1. நான் மடத்தூரணி கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். 1வது எதிரி எனது கணவர். 2ம் எதிரி எனது கணவரின் தம்பி ஆவார். கடந்த 2, 3 ஆண்டுகளுக்கு முன்னதாக ஒரு நாள் மதியம் நான் எனது வீட்டில் இருந்த போது வீட்டிற்கு வெளியே சுமார் 10க்கும் மேற்பட்ட நபர்கள் கூச்சலிட்டு சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் கூட்டத்திற்குள் சென்று பார்த்தபோது கூட்டத்தில் யாரோ என்னை யாரோ கீழே தள்ளிவிட்டார்கள். அதில் எனக்க காயம் ஏற்பட்டது. அதனால் 108 ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனை சென்று 4 நாட்கள் உள்நோயாளியாக தங்கி சிகிச்சை பெற்றுக்கொண்டேன். அப்போது வாலிநோக்கம் போலீசார் வந்து என்னிடம் ஒரு வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்று கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்து என்று எனக்கு தெரியாது. போலீசார் விசாரிக்கவில்லை.

<u>பிறழ் சாட்சி:–</u>

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: –**

எனது கணவரான 1ம் எதிரி எனது மகள் சுபா, அவருக்கு பிடித்த நபரை விரும்பி திருமணம் செய்து கொண்டதால் அவரிடம் யாரும் பேச கூடாது என்று கூறி கோபத்தில் இருந்து வந்த நிலையில் கடந்த 05.06.2023ம் தேதி நான் எனது மகள் ஊரான சிக்கலுக்கு சென்று காய்கறிகளை வாங்கிகொண்டு மதியம் 1.00 மணியளவில் வீட்டிற்கு வந்து கொண்டிருந்த போது 2ம் எதிரி என்னை பார்த்து விட்டு 1ம் எதிரியிடம் நான் எனது மகளை பார்த்து விட்டு வருவதாக போனில் கூறியுள்ளால் என்றால்சரியல்ல. அதன்பிறகு அன்றைய தினமே மதியம் 02.00 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது எதிரிகள் இருவரும் வந்து என்னை ஆபாசமாக பேசி அதில் 1வது எதிரி விறகு கம்பை எடுத்து எனது இடது கையில்அடித்து காயம் ஏற்படுத்தியதாகவும், 2ம் எதிரியும் ஒரு கம்பை எடுத்து என்னை அடிக்க முயன்றதாகவும், நான் தப்பி ஓடியதாகவும், புகார் வாக்குமூலத்திலும், போலீசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் உறவினர் என்பதால் எதிரியுடன் சமதாதானம் செய்து கொண்டு எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/G.தங்ககார்த்திகா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ)
கடலாடி